**EASTERN UNIVERSITY, SRI LANKA**

**FACULTY OF COMMERCE AND MANAGEMENT**

**(EXTERNAL DEGREE)**

**PART I EXAMINATION IN BBA (2009/2010)**

**(PROPER/REPEAT) AUGUST 2014.**

**EXB 201 – MACRO ECONOMICS**

13 OCT 2014

எல்லா வினாக்களுக்கும் விடை தருக — நேரம்: 03 மணி

1. (a). பேரினப்பொருளியலை சிற்றினப்பொருளியலில் இருந்து வேறுபடுத்துக. பேரினப் பொருளியல் சார்ந்த சில பொருளாதாரப் பிரச்சனைகளைக் குறிப்பிடுக?

(04 புள்ளிகள்)

(b). பேரினப்பொருளியல் கொள்கையின் இலக்குகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(c). சேயின் விதியும், நாணயக் கணியக் கொள்கையும் எவ்வாறு பழம் பொருளியலாளர்களின் பேரினப்பொருளியல் கோட்பாட்டு விளக்கத்திற்கு உறுதுணையாக அமைந்தன? விளக்குக.

(12 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

2. (a). தேசிய வருமானம் தொடர்பாகப் பின்வருவனவற்றை விளக்குக.
   1. சாத்திய வள மொத்த உள்நாட்டு உற்பத்தி
   2. ஈடு செய்ய முடியாத இழப்பு (Dead Weight Loss)

(04 புள்ளிகள்)

(b). தேசிய வருமானம், தேசிய வருமானத்தின் சமநிலை மட்டம் ஆகிய இரண்டையும் வேறுபடுத்தி விளக்குக. (04 புள்ளிகள்)

(c). மூடப்பட்ட ஒரு பொருளாதாரத்தின் நுகர்வுத் தொழிற்பாடு வருமாறு.

$$C = 30 + \frac{3}{4} Yd$$

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?
   1. தன்னிச்சையான நுகர்வு 30 மில்லியனாக காணப்படுமாயின் தேசிய வருமானத்தின் சமநிலை மட்டத்தைக் காண்க.
   2. அரசாங்கத்தின் செலவீடு இப் பொருளாதாரத்தில் 20 மில்லியனாக காணப்படுமாயின் புதிய சமநிலை மட்டத்தைக் காண்க.

(08 புள்ளிகள்)

(d). சமநிலை வரவு செலவுத்திட்டப் பெருக்கி என்ற எண்ணக்கருவை சமன்பாட்டை தந்து விளக்குக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

3. (a). "ஒருவரது நிகழ்கால நுகர்வைத் தீர்மானிப்பதில் நிகழ்கால வருமானம் மட்டுமின்றி சார்பு வருமானம், கடந்த கால சேமிப்பு என்பனவும் செல்வாக்கு செலுத்துகின்றன." உதாரணங்கள் தந்து விளக்குக.

(12 புள்ளிகள்)

(b). பணத்திற்கான கேள்வியை கெயின்ஸ் எவ்வாறு வகைப்படுத்திக் கூறுகிறார்?

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

4. (a). முதலின் எல்லைத்திறன் என்பது என்ன? குறிப்பிட்ட ஒரு முதற் சொத்தில் அதிக முதலீடு இடம் பெறும் போது முதலின் எல்லைத்திறன் ஏன் வீழ்ச்சியடைந்து செல்கிறது?

(04 புள்ளிகள்)

(b). தன்னிச்சையான முதலீடு, தூண்டப்பட்ட முதலீடு இரண்டையும் உதாரணங்கள் தந்து விளக்குக.

(04 புள்ளிகள்)

(c). வெளிப்படையான பணவீக்கம், அமுக்கப்பட்ட பணவீக்கம் இரண்டையும் வேறுபடுத்திக் காட்டுக

(04 புள்ளிகள்)

(d). கெயின்ஸ் வீக்க இடைவெளியை எவ்வாறு வரைபடத்தின் மூலம் விளக்கினார்?

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

5. பின்வருவனவற்றுக்கு சிறுகுறிப்புத் தருக

(a). சென்மதி நிலுவையின் மூலதனக் கணக்கு
(b). வர்த்தக சகடவோட்டம்
(c). தேக்கப் பணவீக்கம்
(d). எல்லை நுகர்வு நாட்டமும எல்லை சேமிப்பு நாட்டமும்

(5 x 4 = 20 புள்ளிகள்)